1979 நவம்பர் 2]

2. கவன ஈர்ப்பு.

மழையின்மையால் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளிடம் கடன் வசூல் நிறுத்த வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் போதிய மழையின்மையால் பாதிப்புக்கு உள்ளாகி உள்ள நிலையில் அரசின் கடன்கள் வசூல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டிய அவசர நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வறட்சி, புயல், வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரண நடவடிக்கையாக நிலவரிகள் தள்ளுபடி, கடன் ஒத்திவைத்தல் போன்ற சலுகைகளை அவ்வப்போது அரசு அளித்து வருகிறது. 1385, 1386 பசலிகளுக்குப் பின் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அரசு அணாவாரியாக சான்றிதழ் அளிக்கும் அடிப்படையில் 37 பைசாவும் அதற்குக் குறைவாக விளைந்த நிலங்களுக்கு வரிகளைத் தள்ளுபடி செய்தும், அரசுக் கடன்களை ஒத்திப் போட்டும் சலுகைகளை அளித்தது.

2. இராமநாதபுரம் மாவட்டத்தில் (1388-ம் பசலி ஆண்டில்) 1978 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் வாரத்தில் வறட்சி நிலை நிலவி வருவதாக அம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து முன் அறிக்கை கிடைத்தது. இதன்பின் நிலைமை நீடிப்பதாக மேலும் ஜனவரி 1979-ல் விவரமாக அறிக்கை கொடுத்தார். இந்த மாவட்டத்தின் நிலைமையை நேரில் கண்டறிய வருவாய் வாரியத்தின் உறுப்பினர், பிப்ரவரி 1979-ல் சிவகாசி, இராமநாதபுரம் வட்டங்களில் உள்ள கிராமங்கள் சிலவற்றை சுற்றிப் பார்த்து அறிக்கை கொடுத்தார். புயல், வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தினால் பயிர் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எந்த அடிப்படையில் சலுகைகள் வழங்கப் படுகின்றனவோ அதே அடிப்படையில் வறட்சியால் பயிர் பாதிக்கப்பட்ட இடங்களுக்கும் சலுகை அளிப்பதே சீரான முறையாகும் எனக் கருதி வாரியத்தின் பரிந்துரைகளை ஏற்று கீழ்க்கண்டவாறு உத்திரவிடப் பட்டது :—

[திரு. பி. முசிறிப்புத்தன்] [1979 நவம்பர் 2

(1) 1388-ம் பசலி ஆண்டில் ஒரு வயலில் 37 பைசாவும் (50 சதவிதம்) அதற்கு குறைவாகவும் விளைந்தால் நிலவரியும் உள்ளூர் வரியும் தள்ளுபடி செய்வது ;

(2) 37 பைசாவும் அதற்கு குறைவாகவும் விளைந்த நிலங்களுக்கு கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர் தீர்வை, தனித் தீர்வை, தனித் தண்ணீர் தீர்வை, பணப் பயிர்களுக்கான தீர்வை ஆகியவற்றை தள்ளுபடி செய்வது ;

(3) 37 பைசாவும் அதற்கு குறைவாக விளைந்த புஞ்சை நிலங்களுக்கு உள்ளூர் வரி தள்ளுபடி செய்வது ;

(4) ஊராட்சி ஒன்றியங்களை இம்மாதிரியான நிலங்களுக்கு உள்ளூர் செஸ் மேல்வரி விதிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்வது ;

(5) உள்ளூர் மேல்வரி இழப்புக்கு ஈடாக மானியம் முன்பசலிகளில் பின்பற்றிய முறைப்படி அளிப்பது ;

(6) ஓர் உழவனுக்கு சொந்தமான நிலங்களில் 50 சத வீதத்திற்கு மேற்பட்ட நிலங்களில் நிலவரி தள்ளுபடி பெறுவதற்கு தகுதி பெற்றிருந்தால் நிலுவை வரி உள்ளூர் வரி பாக்கிகள் அரசுக் கடன்கள் ஆகியவற்றின் வசூலை அடுத்த பசலிக்கு ஒத்திப் போடுவது.

3. இந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் மழையில்லாமையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் ஏதுமில்லை. அவ்வாறு தகவல் கிடைத்தால் மாவட்ட ஆட்சியரையும், வருவாய் வாரியத்தையும் கலந்து கொண்டு தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பல விவரங்களை நான் விவரமாகச் சொல்லியிருக்கிறேன். கடன் வசூலில் ஜப்தி நடவடிக்கை இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் நடைமுறை வேறாக இருக்கிறது. திருவாடானை தாலுகாவில் கூட்டுறவுச் சங்க கடனை வசூல் செய்வதில் கடுமையாக நடந்துகொள்கிறார்கள். விவசாயிகளின் வீட்டுப் பூட்டை உடைத்து, சங்கத் தலைவரும் கூடவே இருந்து, ஜப்தி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்காக ஆதாரங்களை கூட்டுறவுத்துறை அமைச்சரிடம் நேரடியாகவே கொடுத்திருக்கிறேன். போலீசாரும் எஃப்.ஐ.ஆர். போட்டிருப்பதாக ரிகார்டு இருக்கிறது. அதைப்போல இளையான்குடி வட்டாரத்திலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாகம்மாள் என்ற பெண்ணும் வேறு சில பெண்களும் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. புல்லங்குடி கிராமத்திலும் ஜப்தி நடவடிக்கை எடுப்பதாக தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

1979 நவம்பர் 2] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

கடன் வசூல் என்பது, அரசும், அரசைச் சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களும் வழங்கிய கடன் வசூல் செய்வதில்தான் இப்படிப்பட்ட ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுபோன்ற எல்லா விவரங்களையும் என்னுடைய கவன ஈர்ப்பில் தெரிவித்திருக்கிறேன். அமைச்சரின் செயலர் அதுபற்றி எந்தவிதமான விளக்கமும் கொடுக்கவில்லை. மழை இல்லை என்று சொன்னால் அதுபற்றி அரசாங்கத்திற்கு தகவல் இல்லை என்று சொல்கிறார்கள் ; ஆச்சரியமாக இருக்கிறது. நேற்றும் இன்றும்தான் மழை பெய்திருக்கிறது. அதற்கு முன்னால் மழை இல்லை. விதை வாங்கக்கூட காசில்லாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஜப்தி நடவடிக்கைகளை ஒத்திவைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

திரு. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய புகார் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன் வடிவினை' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது. அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.